**சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08**

ந.க.எண். 6005 / அ4 /2023 நாள். 21 .12.2023

பொருள் பள்ளிக் கல்வி- அரசு உதவி பெறும் பள்ளிகள் – அரசு உதவி பெறும் கூட்டாண்மை சிறுபான்மைப் பள்ளிகள்- ஆசிரியருடன் உபரி பணியிடங்களை கூட்டு மேலாண்மைப் பள்ளிகளில் உள்ள காலிப் பணியிடங்களில் பணி நிரவல் செய்து விவரம் கோருதல் – சார்ந்து

பார்வை 1. சென்னை-06, பள்ளிக்கல்வி இணைஇயக்குநரின் (இடைநிலைக் கல்வி) செயல்முறைகள் ந.க.எண். 48834/டி1/இ4/2023, நாள். 04.08.2023 , 14.09.2023 மற்றும் 03.10.2023.

2. சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் 2023-2024 பணியாளர் நிர்ணய அறிக்கை

3. சென்னை-06, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 48834/டி1/இ4/2023, நாள்.09.11.2023 மற்றும் 19.12.2023

………………..

2023-2024 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்களுக்கு 01.08.2023 ன்படி பணியாளர் நிர்ணயம் செய்து பார்வை 2-ன்படி ஆணை வழங்கப்பட்டது.

அரசு உதவி பெறும் கூட்டு மேலாண்மை சிறுபான்மை பள்ளிகளில் ஆசிரியருடன் உபரியாக உள்ள பணியிடங்களை கூட்டு மேலாண்மை பள்ளிகளில் காலி பணியிடங்களில் பணிநிரவல் செய்துவிட்டு ஆணை வழங்கப்பட்ட விவரங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. மேலும் கூட்டு மேலாண்மை பள்ளிகளின் விவரங்கள் படிவம் 2 (A) கோரப்பட்டது. நாளது தேதிவரை விவரங்கள் ஏதும் பெறப்படவில்லை.இனியும் காலம் தாழ்த்தாமல் 28.12.2023க்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் கூட்டு மேலாண்மை பள்ளி நிர்வாகம் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பள்ளிகளில் உபரி ஆசிரியர்களை தங்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள

பள்ளிகளில் நிரப்ப தகுந்த அனுமதிக்கப்பட்ட காலிப்பணியிடங்களில் பணிநிரவல் செய்திட வாய்ப்புகள் அளிக்கப்பட்டது. தற்சமயம் 29.12.2023 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு காலிப்பணியிடம் உள்ள போது பணிநிரவல் செய்திட தவறும் நிலையில் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973 பிரிவு 26-ன் கீழ் உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்திட வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மைப் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் மானியம் வழங்கும் ) விதிகள் 1977ன் விதி 6(1)-ல் "Minority schools may be paid grants subject to the orders and instructions issued by Government from time to time " என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்வதை தவிர்த்திட தங்கள் பள்ளியில் நிரப்பத்தகுந்த காலிப்பணியிடங்கள் மற்றும் ஆசிரியருடன் உபரி பணியிடங்கள் இருப்பின் கூட்டு மேலாண்மை பள்ளிகளுக்கு பணிநிரவல் செய்து ஆணை வழங்கி விட்டு அதன் விவரத்தை 28.12.2023க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிச் செயலர் / தாளாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

21/12/23

பெறுநர்

தாளாளர்/செயலர்,

அனைத்து நிதியுதவி பெறும் சிறுபான்மை கூட்டு மேலாண்மை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,

சென்னை மாவட்டம்.

நகல்

1. சென்னை -06, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது
2. சென்னை-49, வடசென்னை (மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) உரிய நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.